**சுருக்கம்**

பொதுப்பணித்துறை – பாசனம் – நபார்டு வங்கியின் ஆர்.ஐ.டி.எப். XI-ன் நிதியுதவியின்கீழ் மேட்டூர் பிரதான கால்வாயினை நவீனப்படுத்த ஒப்பளிக்கப்பட்ட ரூ.1135.09 இலட்சத்தில், அப்பணியினை முடித்த பின்னர் உள்ள சேமிப்புத் தொகையில், ரூ.23.90 இலட்சம் மதிப்பீட்டில் புதிய திட்டமான மேட்டூர் கால்வாயினை சீரமைக்க – அனுமதி ஆணை – வழங்கப்படுகிறது.

---

**பொதுப்பணி (டபிள்யூ1) த்துறை**

அரசாணை (நிலை) எண். 113 நாள்: 01.07.2009

படிக்க:

1. அரசாணை (நிலை) எண். 44, பொதுப்பணித்துறை, நாள் 21.02.2006.
2. அரசாணை (நிலை) எண். 92, பொதுப்பணித்துறை, நாள் 26.05.2006.
3. முதன்மை தலைமைப் பொறியாளரின் கடித எண். எஸ்7(4)/51526/ஆர்ஐடிஎப்/XI/05, நாள் 20.10.2008.

------

**ஆணை:**

மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில், நபார்டு வங்கியின் ஆர்.ஐ.டி.எப். XIன் நிதியுதவியின்கீழ் அணை பாதுகாப்பு, ஏரிகள் அமைத்தல், கால்வாய்கள் சீரமைத்தல் போன்ற 11 (பதினொன்று) நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்றும் பணிக்கு ரூ.1898.32 இலட்சத்தில், மேட்டூர் பிரதான கால்வாயை நவீனப்படுத்தும் திட்டத்திற்கு ரூ.1135.09 இலட்சம் ஒதுக்கீடு செய்து நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், மேட்டூர் .பிரதான கால்வாயினை நவீனப்படுத்துதல் பணிகளை 8 (எட்டு) பகுதிகளாக பிரித்து, ஆணை வெ.ளியிடப்பபட்டது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் திட்ட முடிவு அறிக்கையை 06.10.2008 அன்று நபார்டு வங்கிக்கு அனுப்பியுள்ளதாக முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வள ஆதாரத்துறை தெரிவித்து, மேலும் அத்திட்டத்திற்காக ஒப்பளிக்கப்பட்ட மதிப்பீடான ரூ.1135.09 இலட்சத்திலிருந்து, திட்டம் முடிவடையும் போது செலவிடப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.1110.301 இலட்சம் போக, மீதமுள்ள சேமிப்புத் தொகையாக ரூ.24.789 இலட்சத்தை அத்திட்டத்திற்கு தொடர்புடைய கீழ்கண்ட நான்கு பணிகளுக்கு பயன்படுத்திக் கொள்ள

முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வள ஆதாரத்துறை அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார். அப்பணிகளின் விவரம் பின்வருமாறு:–

(i) சேலம் மாவட்டம், மேட்டூர் கிழக்குகரை கால்வாயில் 13/2 மைலில் பிரியும் கிளையில் மைல் 1/6 முதல் மற்றும் 2/3 மைல் இடையில் சிறு பாலம் கட்டுதல் மற்றும் கால்வாய்களை மேம்படுத்தும் பணி

ரூ.4.95 இலட்சம்

(ii) சேலம் மாவட்டம், மேட்டூர் கிழக்குகரை கால்வாயில் 19/3 மைலில் பிரியும் கிளையில் மைல் 0/3 முதல் மைல் 0/4 வரை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணி

ரூ.4.95 இலட்சம்

(iii) ஈரோடு மாவட்டம், மேட்டூர் மேற்குகரை கால்வாயில் 19/2 மைலில் பிரியும் கிளையில் மைல் 2/5 முதல் மைல் 2/7 வரை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணி

ரூ.7.00 இலட்சம்

(iV) நாமக்கல் மாவட்டம், மேட்டூர் கிழக்குகரை கால்வாயில் 39/4 மைலில் பிரியும் கிளையில் மைல் 0/1 முதல் மைல் 1/0 வரை கால்வாய்களை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணி

ரூ.7.00 இலட்சம்

------------

மொத்தம் ரூ.23.90 இலட்சம்

------------

4. மேற்காணும் பணிகளை செயல்படுத்தினால் இதுவரை ஏற்பட்டு வரும் நீர் இழப்பினை தவிர்க்க இயலும் என்றும், மேலும் நபார்டு வங்கி நிதியுதவியின்கீழ் ஒரு திட்டப்பணி முழுமையாக நிறைவு பெற்ற பின்னர் கிடைக்கும் சேமிப்பில், மொத்த மதிப்பீட்டில் 10 விழுக்காட்டினை பயன்படுத்தி, முடிவடைந்த திட்டப் பணியினை சார்ந்த பயனுள்ள வேறுபணிகளை மேற்கொள்ளலாம் என்றும், இந்நேர்வில், சேமிப்புத் தொகையான ரூ.24.789 இலட்சத்திலிருந்து மேற்கண்ட நான்கு புதிய திட்ட பணிகளை ரூ.23.90 இலட்சத்தில் மேற்கொள்ளலாம் என்றும், இது ஏற்கனவே நபார்டு வங்கி இத்திட்டத்திற்காக நிர்வாக ஒப்புதல் வழங்கிய ரூ.1135.09 இலட்சத்தில் 2.11% மட்டுமேயாகும் என்றும், இந்நேர்வில் குறிப்பிட்டுள்ள நான்கு பணிகளை ரூ.23.90 இலட்சத்தில் மேற்கொள்ள அரசின் அனுமதி வேண்டி முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வள ஆதாரத்துறை கோரியுள்ளார். அவர்களின் கோரிக்கையை நன்கு ஆய்வு செய்யப்பட்டது. நபார்டு வங்கியின் ஆர்.ஐ.டி.எப். XI–ன் நிதியுதவியின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட மேட்டூர்

கால்வாயினை நவீனப்படுத்த ஒப்பளிக்கப்பட்ட தொகையான ரூ.1135.09 இலட்சத்திலிருந்து பணியினை முடித்த பின்னர் கிடைக்கப் பெற்ற சேமிப்புத் தொகை ரூ.24.789 இலட்சத்திலிருந்து கீழே குறிப்பிட்டுள்ள நான்கு பணிகளை ரூ.23.90 இலட்சத்தில் (ரூபாய் இருபத்து மூன்று இலட்சத்து தொன்னூறாயிரம் மட்டும்) மேற்கொள்ள நபார்டு வங்கியின் முன் அனுமதியை பெறவேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதி வழங்கி ஆணையிடுகிறது:-

(i) சேலம் மாவட்டம், மேட்டூர் கிழக்குகரை கால்வாயில் 13/2 மைலில் பிரியும் கிளையில் மைல் 1/6 முதல் மற்றும் 2/3 மைல் இடையில் சிறு பாலம் கட்டுதல் மற்றும் கால்வாய்களை மேம்படுத்தும் பணி

ரூ.4.95 இலட்சம்

(ii) சேலம் மாவட்டம், மேட்டூர் கிழக்குகரை கால்வாயில் 19/3 மைலில் பிரியும் கிளையில் மைல் 0/3 முதல் மைல் 0/4 வரை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணி

ரூ.4.95 இலட்சம்

(iii) ஈரோடு மாவட்டம், மேட்டூர் மேற்குகரை கால்வாயில் 19/2 மைலில் பிரியும் கிளையில் மைல் 2/5 முதல் மைல் 2/7 வரை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணி

ரூ.7.00 இலட்சம்

(iv) நாமக்கல் மாவட்டம், மேட்டூர் கிழக்குகரை கால்வாயில் 39/4 மைலில் பிரியும் கிளையில் மைல் 0/1 முதல் மைல் 1/0 வரை கால்வாய்களை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தும் பணி

ரூ.7.00 இலட்சம்

மொத்தம் ரூ.23.90 இலட்சம்

5. மேலே பத்தி 4–ல் ஒப்புதலளிக்கப்பட்ட இத்திட்டத்திற்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"4701 பெரிய நடுத்தர பாசன திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு 03 – நடுத்தர பாசனம் – வணிகத்தன்மை வாய்ந்தது – 345 நடுத்தர பாசனத் திட்டங்கள் பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநில திட்டம் – JB ஊரக அடிப்படை வசதி, மேம்பாட்டு நிதியுதவி திட்டம் XIIIன் கீழ் நபார்டு கடன் நிதி உதவியுடன் நடைமுறையில் உள்ள நீர்பாசன கால்வாய் ஏரிகளை புனரமைத்தல் மற்றும் அணையை புனரமைத்து பாதுகாத்தல் – 16 பெரும்பணிகள் (த.தொகு. – 4701–03–345–JB 1607)."

6. மேலே பத்தி 4–ல் ஒப்புதல் வழங்கப்பட்ட செலவினத்திற்கு, திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீடு 2009–2010ல் நிதியொதுக்கம் செய்யப்படும். இதனை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்வதற்கு முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொதுப்பணித்துறை), பொபது, சென்னை–5 அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மேலும், 2009–20010 ஆம் ஆண்டிற்கான திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீட்டிற்கான கருத்துருவை அரசுக்கு அனுப்பும்பொழுது, இச்செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்பி வைக்குமாறு முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வள ஆதாரத்துறை, சென்னை–5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இத்திட்டத்தை மேற்கொள்ளும்பொழுது நபார்டு நிறுவனம் நீர்பாசன திட்டங்களுக்கு ஆர்.ஐ.டி.எப். XI-ன் கீழ் கடன் வழங்குவதற்கு விதித்த சிறப்பு விதிமுறைகளையும், வரையறைகளையும் தவறாது கடைபிடிக்க வேண்டும் என்று அரசு ஆணையிடுகிறது.

7. இந்த ஆணை நிதித்துறையின் இசைவினை அ.சா.கு. எண். 33378/பொ.ப.II/2009, நாள் 24.06.2009 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 287 (இருநூற்று எண்பத்து ஏழு)–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

சு. இராமசுந்தரம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை, சென்னை – 5.
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத்துறை, சென்னை – 5.
தலைமைப் பொறியாளர், திருச்சி மண்டலம், நீர்வள ஆதாரத்துறை, திருச்சி.
மாநில கணக்காயர், சென்னை – 18/35.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்.

<u>நகல்</u>
பொதுப்பணித்துறையின் பாசனப் பிரிவுகள்.
நிதி (பொ.ப. II / வ.செ. பொது II) த்துறை, சென்னை – 9.
பொதுப்பணித்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை – 9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்